Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 120

National Tamil Daily தேசிய தினசரி

(11-6-65)

விசுவாவசு வைகாசி 29 ஸபர் பிறை 10 வெள்ளிக்கிழமை

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா – இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

நீடித்த பாவனைக்கு
சொனென்ஷீன் சொனென்ஷீன்

பற்றறிகளையே உபயோகியுங்கள்
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:-
துரை அன் கோ
23/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# முப்படை தளபதிகளின் முக்கிய மகாநாடு

## கள்ளக் குடியேற்றத்தை தடுப்பது பற்றி ஆலோசனை

### வடபகுதி அரசாங்க அதிபர்களும் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதியில் சட்டவிரோதக் குடியேற்றம் சென்ற மாதத்திலிருந்து அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து அதைத் தடைசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுப்பது பற்றியும் வடபகுதியில் முகாமிட்டுள்ள இராணுவத்தினரின் நடவடிக்கைகள் குறித்தும் நேற்று யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்ற உயர்தர மகாநாடொன்றில் ஆலோசனை செய்யப்பட்டது.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு வி பி சமரசிங்க, கடற்படைத்தளபதி ராஜன் கதிர்காமர், விமானப்படைத் தளபதி ஆர் அமரசேகரா, இராணுவத் தளபதி கேணல் றிச்சார்ட் உடுகம, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு ஏ பெருமையினர், குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாட்டதிகாரி திரு டி ஜெயசிங்கா, யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபர் திரு வான்சான்டன், பலாலி இராணுவமுகாம் பொறுப்பதிகாரி, காரைநகர் கடற்படைமுகாம் பொறுப்பதிகாரி ஆகியோர் இம்மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

நேற்றுப் பிற்பகல் இம் மகாநாடு நடைபெற்றது. இதற்குமுன் பலாலி, வல்வெட்டித்துறை, காரைநகர், இயக்கச்சி ஆகிய இடங்களிலுள்ள இராணுவ கட்டளை முகாம்களை அவர்கள் பார்வையிட்டனர். மன்னார் இராணுவ முகாமையும் தலைமன்னார் சட்டவிரோதக் குடியேற்ற முகாமையும் அவர்கள் பார்வையிட்டுவந்தனர்.

சட்டவிரோதக் குடியேற்றம் தென்மேற்குப் பருவப்பெயர்ச்சிக்காற்று வீசத் தொடங்கியதிலிருந்து அதிகரித்திருப்பதாக இந்த மகாநாட்டில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களைப்பற்றிய தகவல்களை உடனுக்குடன் பெறுவதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டியது மிக அவசியமென்றும் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், மகாநாட்டில் கருத்துத் தெரிவிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

வடபகுதியில்முகாமிட்டுள்ள இராணுவத்தினர் சிலசமயங்களில் பொதுமக்களை இம்சை செய்வதாகத் தெரிவிக்கப்படும் புகார்பற்றியும் இம் மகாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் சமீபத்தில் திருச்சியில் இலங்கை-இந்தியப் பொலிஸ் அதிகாரிகளுக்கிடையில் நடைபெற்ற சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு முயற்சிகள் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியும் இராணுவ, கடற்படை, விமானப்படைத் தளபதிகளும் இலங்கை ரோயல் விமானப்படை விமானமொன்றில் இங்கு வந்தனர்.

## எம். பி.க்களுக்கு சலுகை

பம்பலப்பிட்டி, வியாழன்

எம். பிக்கள் இலவசமாக இலங்கையின் எப்பகுதிக்கும் இ. போ. ச. பஸ்களில் பிரயாணம் செய்வதற்கு இலவச பாஸ்கள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது ரயிலில் இலங்கையின் எப்பகுதிக்குப் பிரயாணம் செய்யவும் பார்லிமெண்ட் கூட்டம் நடைபெறும் சமயங்களில் விமான மூலம் கொழும்புக்குச் செல்லவும் மட்டும்தான் இவர்களுக்கு இலவச பாஸ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## வள்ளுவர் தினம்

சுழிபுரம், வெள்ளி

வழக்கம்பரை சனசமூக நிலையத்தினர் வழக்கம்பரை அம்மன்கோவில் மண்டபத்தில் இன்று மாலை 6 மணியளவில் வள்ளுவர்தின விழாவைக் கொண்டாடவிருக்கின்றனர்.

திரு. மு. சிவானந்தன் 'வள்ளுவன் வகுத்தநெறி' என்னும் பொருள்பற்றிப் பேசுவார்.

## விரைவில் நியமனம்

பம்பலப்பிட்டி, வியாழன்

உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஈ. டபிள்யு ஜெயக்கொடியின் இடத்திற்கு விரைவில் புதியவர் ஒருவர் நியமனம் செய்யப்படுவார் எனத் தெரியவருகிறது.

## இலங்கைக்குச் சமீபத்தில் சமுத்திரத்தில் மலைத்தொடர்

பம்பலப்பிட்டி, வியாழன்

இலங்கைக்கு 1500 மைல் தூரத்தில் இந்துமகாசமுத்திரத்தில் மலைதொடர் இருப்பதாக சமுத்திர ஆராய்ச்சியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவுக்குச் சமீபத்திலும் சமுத்திரத்தில் மலைத்தொடர் ஒன்று இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. பர்மா தாய்லாந்துக்குச் சமீபத்தில் சமுத்திரத்தில் மாபெரும் மீன் கூட்டம் ஒன்று இருப்பதாகவும சோமாலியாவுக்கு தென்கிழக்கே அரபிக்கடலில் சமுத்திரத்தில் ஏற்பட்ட பருவ மாற்றத்தால் மற்றொரு மாபெரும் மீன் கூட்டம் மடிந்துவிட்டதாகவும் இந்த ஆராய்ச்சியிலிருந்து தெரியவருகிறது.

## அறிவித்தல்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் பூங்காவனத் திருவிழா 14-6-65 திங்கட்கிழமை பிற்பகல் 5 மணி தொடக்கம் நடைபெறும்.

சிறந்த கலைநிகழ்ச்சிகளும் அலங்கார அமைப்புக்களும் இடம்பெறும்.

412 உபயகாரர்.

கிளிநொச்சியில்

## இன்று ஆரம்பமாகும் திருக்குறள் மகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ்மறைக் கழகத்தின் பதின்மூன்றாவது திருக்குறள் மகாநாடு இன்று மாலை கிளிநொச்சி ரெட்பிறோ மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள நாவலர் அரங்கில் ஆரம்பமாகின்றது. மதுரையைச்சேர்ந்த வைத்திய கலாநிதி திருமதி தாரா நடராசன் மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார்.

இன்று பிற்பகல் 3 மணிக்கு தமிழ்மறைக் கழகத்தின் தலைவரும் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினருமான பண்டிதர் க. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும். ஏட்டுச்சுவடி ஊர்வலத்துடன் விழா ஆரம்பமாகும். பிற்பகல் 4 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவிகள் கடவுள் வாழ்த்துப் பாடுவார்கள்.

வைத்திய கலாநிதி திரு ஜாக் குலசப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்துவார். அதன்பின் வைத்திய கலாநிதி திருமதி தாரா நடராசன் ஆரம்ப உரை நிகழ்த்துவார். அதன்பின் பண்டிதை திருமதி சத்தியதேவி துரைசிங்கம், பண்டிதர் செ. துரைசிங்கம், பண்டிதர் க. சின்னத்தம்பி, மதுரையைச் சேர்ந்த திரு ஔவை துரை நடராசன் ஆகியோரின் விரிவுரைகள் இடம்பெறும்.

இரவு திரு. சி. சிவகுருநாதன் தலைமையில் நடைபெறும் கலையரங்கில் முரசுமோட்டை முருகானந்த வித்தியாசாலை மாணவிகளின் நடனநிகழ்ச்சிகளும் உருத்திரபுரம் ராஜ் சித்திராலய நாடகமன்றத்தின் 'மயிடிக்காப்பான்' என்ற நாடகமும் நடைபெறும். விழா தொடர்ந்து சனி, ஞாயிறு ஆகிய இருதினங்களும் நடைபெறும்.

## கரணவாயில் திருவள்ளுவர் நினைவுவிழா

உடுப்பிட்டி, வியாழன்

கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் ஆறுவது திருவள்ளுவர் நினைவு விழா இம்மாதம் 16-ம் 17-ம் திகதி புதன், வியாழக்கிழமைகளில்கரணவாய் உபதபாற்கந்தோரில் அருகாமையில் அமைக்கப்பெற்ற "விபுலானந்தர்" அரங்கில் நடைபெற விருக்கிறது.

16-6-65 புதன்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் முதல் நாள் நிகழ்ச்சிகளுக்குப் பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை தலைமை வகிப்பார், கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து திரு. க. முத்துவேலு ஆசிரியரின் வரவேற்புரையும தலைமையுரையும் நடைபெறும். மதுரை அரசினர மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவ கலாநிதி திருவாட்டி தாரா நடராசன் கட்டுரை, பேச்சுப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில் வழங்குவார்.

'தலத்தில் உயர்ந்த தமிழ் மறை' என்பதுபற்றி மதுரை தியாகராசர் கல்லூரி பேராசிரியர் திரு. ஔவை. துரை நடராசனும், "அருளும் பொருளும்" என்பது பற்றி திரு. வே. சிவக்கொழுந்து (யாழ்ப்பாணன்) வும் 'வள்ளுவர்கண்ட இல்லறம்' பற்றி செல்வி புஷ்பா செல்வநாயகமும், 'வள்ளுவர் உள்ளம்' பற்றி வித்துவான், பண்டிதர், சைவப்புலவர் வேந்தனும் விரிவுரைகள் நிகழ்த்துவார்கள், செல்வி உஷாவின் நடனமும், கரணவாய் பொன்னம்பல வித்தியாலய மாணவிகளின் பரதநாட்டியமும், கிராமிய நடனமும், "கண்டி அரசன்" நாடகமும் செல்வன் த. செல்வவிநாயகத்தின் சங்கீதக்கச்சேரியும் நடைபெறும்.

17-6-65 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாம் நாள நிகழ்ச்சிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய விரிவுரையாளர் வித்துவான் பொன். முத்துக்குமாரன் தலைமை வகிப்பார், தலைமையுரையைத் தொடர்ந்து திருவள்ளுவர் நினைவு விழாப் போட்டிகளில் முதலிடம்பெற்ற மாணவர்களின் பேச்சுக்களும் தொடர்ந்து கருத்தரங்கும் நடைபெறும். "திருவள்ளுவர் குடியாட்சியைத் தழுவியவரா? கோளாட்சியைத் தழுவியவரா?" என்னும் பொருள் பற்றி கருத்தரங்கில் குடியாட்சியைத் தழுவியவர் என்பது பற்றித் திருவாளர்கள் இ. மகாதேவா (தேவன்) புதுமைலோலன், பண்டிதர் செ. துரைசிங்கமும் திரு. ஈ. செல்லப்பா ஆகியோரும் எதிர்த்தரப்பில் "கோளாட்சியைத் தழுவியவர்" என்பதுபற்றித் திருவாளர்கள

(6-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

பணத்தை தெய்வமாகக் கொண்டாடுபவர்களால் தயாரிக்கப்பட்ட இக்கல்வி முறை எங்கள் ஆன்மா கொன்றுவிட்டது, இந்துக்கள் எந்தவிதமான மதக் கல்வியையும் பெறமுடியவில்லை.

—மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Pox 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு வைகாசி ௴ 29 உ (11-6-65)

## காய்கறிப் பஞ்சம்

கொழும்பிலே பொதுமக்களுக்குக் காய்கறிகளை மலிவாகக் கிடைக்கச்செய்யக் கூட்டுறவு இலாகாவும், மார்க்கெட்டிங் இலாகாவும் ஒத்துழைத்து விசேஷ ஏற்பாடுகள் செய்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதுபோன்ற நடவடிக்கைகளை இலங்கையின் இரண்டாவது பெரிய நகரான யாழ்ப்பாணத்திலும் எடுக்கவேண்டியது அவசரமும், அவசியமுமாகும்.

யாழ்ப்பாணத்திலே ஒரு வளிக்குப்பின் காய்கறிகளுக்கும் · வாழைப்பழங்களுக்கும் அதிக பஞ்சம். ஐந்துசதம் விற்றபழம் 15 சதமாம்! ஐந்து சதம் விற்க கீரைக்கட்டு, 15 முதல் 20 சதம் விற்கிறதாம், எல்லா காய்கறிகளும் விலை அதிகம், எளிய, நடுத்தர குடும்பத்தினர் அதிக விலை கொடுத்து காய்கறிகளை வாங்க முடியாமல் பெரிதும் அவதிப்படுகின்றார்கள். அதனால் அவர்களது சுகாதாரமும் மோசமடைந்து பல நோய்களுக்கும் உள்ளாக நேர்டுகின்றது. ஆகவே இம்முக்கிய விஷயத்தில் இங்குள்ள மாநகரசபையும், கூட்டுறவு, மார்க்கெட் இலாகாக்களும் ஒத்துழைத்து மக்களின் கஷ்டத்தைக் கூடுமானவரை தீர்க்க முன்வர வேண்டும்.

வவனியா உள்ளிட்டு வடமாகாணத்தில் பல இடங்களில் காய்கறிகள் அதிகம் உற்பத்தியாகின்றன. அவற்றை மலிவாக வாங்கி, இங்கு பொதுமக்களுக்கு நியாயமான விலைக்கு விற்பனை செய்ய மாநகரசபை விசேஷ ஒழுங்குகளைச் செய்ய வேண்டியது அதன் கடமையாகும். கிடைக்கும் காய்கறிகளையெல்லாம் மார்க்கெட் இலாகா வாங்கி வைக்க போதிய குளிர்சாதன அறைகள் இல்லையாம், அதனால் குறைவாகவே வாங்கி விற்பதாயும் · இக்குறையை நீக்க, புதிய குளிர்சாதன அறையைக் கொழும்பில் அமைப்பதுடன் தலைநகரில் பல இடங்களிலே காய்கறிகளை நியாயமான விலைக்கு விற்க புதிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. யாழ்ப்பாணத்திலும் காய்கறிப் பஞ்சம் அதிகம் ஏற்பட்டுள்ளதால் இவ்வித விசேஷ ஏற்பாட்டைச் செய்ய வேண்டிய அவசியம் அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் பொறுப்பு, தலைநகரவாசிகளுக்கு மட்டுமன்றி, வடமாகாண வாசிகள் விஷயத்திலும் உண்டாகையால் இங்கும் குளிர்சாதன அறையை ஏற்படுத்த வேண்டும். யாழ்ப்பாண எம். பி.யும் மாநகரசபையும் இதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டு ஒத்துழைக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்திலேயே காய்கறிகளுக்கும் பழங்களுக்கும் பஞ்சம் ஏற்பட்டிருக்கையில் இங்கிருந்து இவை தென்னிலங்கைக்குக் கொண்டு செல்லப்படுவதைத் தடுக்க வேண்டியதவசியமாகும். இங்கு காய்க்கும் மாம்பழங்கள் கொழும்பிலே மலிவாகவும் இங்கு அதிக விலைக்கும் விற்கப்படுகின்றன. நல்ல மாம்பழங்கள் 50 சதத்துக்கு மேல் விற்பதால் ஏழை மக்களும் நடுத்தர குடும்பத்தாரும் அதை வாங்க முடியாமலுள்ளது. இங்குள்ள மக்களுக்கு இங்கு விளையும் காய்கறிகளும் பழங்களும் மலிவாகக் கிடைக்கும்படி முதலில் பார்த்துக்கொண்டு மிஞ்சியவற்றையே வெளியிடங்களுக்கு அனுமதிக்க வேண்டும்.

இவ்விஷயத்தில் பொதுமக்களுக்கும் ஒரு பொறுப்புண்டு. அரசாங்கத்தையோ மாநகரசபையையோ மட்டும் நம்பியிராமல் தங்கள் வீட்டுக் கொல்லைகளில் காய்கறிகளைக் கூடுமானவரை பயிரிட வேண்டும். பல வீடுகளிலே செழிப்பான பூமி சும்மா கிடக்கின்றது. தண்ணீர் வசதியுமுண்டு. இம்மி இடத்தையும் வீணாக்காமல் சற்றே சிரமமெடுத்து காய்கறிகளை விளைத்தால் அவர்கள் வீட்டுக்கு வேண்டிய காய்கறி கொடுக்க பூமாதேவி தயாராக இருக்கின்றாள். இவ்வித ஆக்க வேலைகளில் ஆங்காங்கே ஜனசமூகநிலையங்களும் ஸ்தலஸ்தாபனங்களும் பொதுஸ்தாபனங்களும் ஈடுபடுவதாயின் இந்தக் காய்கறிப் பஞ்சத்தை சுலபமாக சமாளிப்பதுடன் மக்கள் தங்கள் செலவையும் மிச்சப்படுத்த முடியும்.

## இலங்கை வரும் சிதானந்தஜி

பம்பலப்பிட்டி வியாழன்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிதானந்தஜி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இலங்கை வருகிறார். இலங்கையில் தங்கியிருக்கும் பத்து நாட்களிலும் இவர் தீவின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்வார். இதற்கானஒழுங்குகளை திவ்யஜீவன சங்கத்தின் கொழும்புக்கிளை ஒழுங்கு செய்துள்ளது.

13-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12-20 மணிக்கு ரத்மலானை விமானநிலையத்தை வந்தடையும், சுவாமிஜி அன்றையதினம் பம்பலப்பிட்டி சரஸ்வதிமண்டபத்திக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார்.

அடுத்தநாள் திங்கட்கிழமை சுவாமிஜி சமனி ஆலயத்துக்குச் செல்வதுடன் வைசவமங்கையர்கழகத்தில் உரைநிகழ்த்துவார். அன்று மாலை கொழும்பு மாநகரசபை சுவாமிஜிக்கு பொதுவரவேற்பொன்றை அளிக்கும். சுவாமிஜி 15-ந் திகதி யாழ்ப்பாணத்திலும், 16-ந் திகதி திருக்கோணமலையிலும் தங்கி இருப்பார். 17-ந் திகதி மட்டக்களப்புக்குச் சென்று அங்கிருந்து பொல்லநறுவைச் சிவன் கோவிலுக்கு செல்லுவார். 18-ந் திகதி குருநாகலைக்கும் அங்கிருந்து கண்டிக்கும் செல்லுவார். கண்டி மாநகரசபை சுவாமிஜிக்குபொது வரவேற்பளிக்கும், பல்கலைக் கழகத்திலும் உரைநிகழ்த்துவார். 20-ந் திகதி கதிர்காம ஆலயத்துக்கும், இரிவிகாரைக்கும் செல்வார். 21-ந் திகதி காலிக்குச்சென்று அங்கிருந்து கொழும்புசென்று அன்றைய தினம் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கூட்டத்தில் உரை நிகழ்த்துவார். சுவாமிஜி 22-ந் திகதி இந்தியா புறப்படுவார்.

# ஆங்கிலமும் தமிழின் நிலையிலேயே இருந்தது

## மொழிபெயர்ப்பு பற்றி பேராசிரியர் மயில்வாகனம்

பேராதனை, வியாழன்

"அறிவியல் நூல்கள் ஜெர்மனிய பிரான்சிய மொழிகளிலிருந்தே ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கப்பட்டன, அக்கால கட்டத்தில் இன்று தமிழ் மொழியை எதிர்நோக்கியுள்ள பிரச்னை ஆங்கில மொழிக்கும் இருக்கத்தான் செய்தது. ஆனால் அவர்கள் எந்த அளவிற்கு ஆங்கில சொற்களைப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவிற்கு ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து மொழி ஆக்கம் செய்தனர். இவ்வாறுதான் நாம் இன்று அறிவியல் நூல்களை தமிழாக்கம் செய்யும் போது இலக்கண விதிகளுக்கு ஏற்ப எம்மால் முடிந்தவரை தூய தமிழில் மொழியாக்கம் செய்தல் வேண்டும். இவை ஆரம்பத்தில் எமக்கும் மாணவர்களுக்கும் சிறிது கஷ்டமாக தென்பட்டாலும் வளர்ச்சியில் இலகுவான பயன் உடைய தொன்றாக அமையும்" இவ்வாறு பேராசிரியர் ஏ. வி. மயில்வாகனம் பேராதனை பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தினர் நடாத்திய அறிவியல் விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார். பல்கலைக்கழக மருத்துவ ஆராய்ச்சிப் பகுதி மண்டபத்தில் நடைபெற்ற இவ்வறிவியல் விழாவிற்கு திரு. கே. மயில்வாகனம் தலைமை வகித்தார்

தமிழ் விரிவுரையாளர் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை இவ்விழாவினை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்துப் பேசுகையில், தமிழில் அறிவியல் புதியதல்ல. பண்டைக்காலம் முதல் தமிழ் இலக்கியத்தில் பிரிக்க முடியாதவாறு அறிவியல் இணைந்து இருந்தது. ஆனால் காலத்தின் போக்கிற்கு ஏற்ப, மனிதன் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப தமிழ் இலக்கியத்திலிருந்து பிரிக்கப்பட்ட தனிப்பட்ட ஒரு இயலாக அறிவியல் வளர்ச்சி பெற்றுள்ளது என்றார்.

புவி இயல் பகுதி விரிவுரையாளர் திரு. சோ. செல்வநாயகம் பேசும்போது நன்னூலாரின் இலக்கண விதிகளுக்கு அமைய தமிழ் இலக்கியங்கள் ஆக்கப்பட வேண்டுமென கூச்சல் போடப்படுகின்றது. ஆனால் தொல்காப்பியனாரின் இலக்கணவிதிகளிலிருந்து நன்னூலாரின் இலக்கணவிதி மாறுபடுவதை நாம் நோக்கும்போது அது காலத்தின் போக்கிற்கு ஏற்ப இலக்கண விதிகள் மாற்றமடைவதைக் காட்டுகின்றது, எனவே அறிவியல் நூல்களை தமிழாக்கம் செய்யும் போது நன்னூலாரின் விதிகளைப் பின்பற்றுமாறு கூறுவது தவறாகும். இன்று எமமை நோக்கும் முக்கிய பிரச்னை, மொழிக்கு முதலிலும் இறுதியிலும் குறிப்பிட்ட சில எழுத்துக்கள் மாத்திரம் தான் வருமென நன்னூலார் வகுத்த விதியை அடிப்படையாகக் கொண்டதேயாகும் இப்பிரச்னை தீர்வதற்கு நன்னூலார் விதியை மாற்றி மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரும் சொற்களை கூட்டி, வடமொழிச் சொற்களை பிரயோகித்து மொழியாக்கம் செய்ய முற்படின் சுலபமாக அமையும் வடமொழி சொற்களை தமிழில் புகுத்தவேண்டுமெனக் கூறும் போது தமிழ் மொழியின் தனித்தன்மை கெட்டுவிடுமென்றும் தமிழ் மொழி சிதைந்துவிடுமெனக் கூறுவோருமுண்டு ஆனால் எந்த ஒரு மொழியும் பிறமொழி தொடர்பை ஏற்க மறுக்குமேயானால் அவை இறந்த மொழிகளாவதை வரலாறு காட்டுகின்றது, ஆனால் இவ்வாறு வடமொழிச் சொற்களை புகுத்தும்போது ஓரளவுக்குக் கட்டுப்பாடும் இருத்தல்வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் டாக்டர் வி. மயில்வாகனம், டாக்டர் தே. சிவப்பிரகாசபிள்ளை, திரு. ஆர். அம்பிகைபாகன் ஆகியோரும் பேசினர்.——

## வியட்காங் கைப்பற்றியது

சைகோன், ஜூன் 10

தென்வியட்னாம் தலைநகரான சைகோனுக்கு வடக்கே 60 மைல் தூரத்திலுள்ள ஜில்லா ஒன்றை வியட்காங் கம்யூனிஸ்டுக்கள் கைப்பற்றினர்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

வேண்டிய ஏழு காரியங்களைப் பற்றி தேசிகமணி கூறியதாவது: (1) தீட்சை தாங்கள் எடுப்பதுடன், மற்ற சைவ மாணவர்களையும் எடுக்கச் செய்தல். (2) கூட்டுப்பிரார்த்தனை நடத்துதல், (3) சமய சொற்பொழிவாற்றுதல், (4) சமயவகுப்பு நடத்துதல், (5) கிரியைகளைச் சிக்கனமாகச் செய்தல், (6) கிராமங்கள் தோறும் சமயப் பிரசாரம் செய்தல், (7) அறிஞர்களைக் கௌரவித்தல்.

இவற்றில் பலவற்றை சைவப்புலவர் சங்கத்தார் செய்துவருவது குறிப்பிடத் தக்கது.

* * *

மற்றொரு மகிழ்ச்சியான செய்தி. சென்ற ஆண்டில் இந்தியாவில் நடைபெற்ற சைவப்புலவர் பரீட்சையிலே அளவெட்டியைச் சேர்ந்த செல்வி மனோன்மணி தான் முதல்வகுப்பில் முதலாவதாகத் தேறி, விசேஷ தங்கப்பதக்கத்தையும் பெற்றார் இதைக்காண அங்கு எல்லோருக்கும் மிகப்பெருமையாக இருந்தது. ஈழத்து மாணவ மாணவிகள்தான் இம் பரீட்சையில் அதிகமாகத் தேறுவதாகத் தெரிகிறது.

இலங்கையிலே சைவசமய பாடம் சைவமாணவர்களுக்குக் கட்டாயபாடமாக்கப்பட்டுள்ளதால், இதை நன்கு கற்பிக்க, இந்த சைவப்புலவர்களை தகுந்தவர், தமிழிலும் சமயத்திலும் மேலான பயிற்சி பெற்றிருப்பதால், பாடங்கற்பிக்க அவர்களை விடத் தகுந்தவர்கள் வேறு யாரும் இருக்கமுடியாது. ஸ்ரீ தேசிகமணி அவர்கள் தமது 50-வது வயதில் இந்தப் பரீட்சை எழுதி பட்டம்பெற்றாராம்! இலங்கையிலே பல பள்ளிக்கூடங்களிலே சைவசமய பாடத்தை சரிவரக் கற்பிக்க தகுந்த ஆசிரியர்களில்லை. சைவப்புலவர்களுக்கு விசேஷ வேதனம் கொடுத்து இப்பாடத்தைக்கற்பிக்க எல்லா சைவப் பள்ளிக்கூடங்களிலும் ஒழுங்கு செய்யலாம்

* * *

வடக்கும் கிழக்கும் மட்டக்களப்பு மகாநாட்டில் சந்தித்தன 'ல அறிஞர்கள் பேசினர் ஆசிரியர் கைலாயபிள்ளையின் மாணவிகளின் அழகிய நடனங்கள் மகாநாட்டைச் சிறப்பித்தன இம்மகாநாட்டின் பயனாக, கிழக்கு மாகாணத்தில் சைவம் மீண்டும் தலைதூக்குமென்று நம்புவது மிகையாகாது.

*

பிரிந்து நன்மணத்தால் வழிபடும் மாணிதன் உயிர்மேல் வரும் கூற்றைத், திரிந்திடா வண்ணம் உதைத்தவர்க்குருஞ் செல்வமயார் நம்மையாளுடை, விரிந்துயர் மாதவிபுன்னை வேண்மைவண் செருந்தி செண்பகத்தின், குருந்தொடுமுல்லை கொடிவிடும்பொழில் சூழ் கோணமாமலையார்ந்தாரே.

—திருஞானசம்பந்தசுவாமிகள்

### ஐயாறன் எழுதுவது

மட்டக்களப்பிலே என்மனதைப் பெரிதும் கவர்ந்தது, அங்கு கட்டப்பட்டுள்ள புதிய பள்ளிவாசல்தான். எவ்வளவு சுத்தம்! எவ்வளவு அமைதி! எத்தனை வசதி! கண்டோர் மனதை வசீகரிக்கக்கூடிய அழகான அந்தப் பள்ளிவாசலில் நுழைந்து அங்கு தியானம் செய்யவேண்டும்போல் மனம் தூண்டியது ஆனால்......

காலை சுமார் 4 மணிக்கே பள்ளிவாசல் திறக்கப்பட்டு மின்விளக்குகள் பிரகாசித்தன. பல இஸ்லாமிய அன்பர்கள்பிரார்த்தனையில் கலந்துகொள்ள உள்ளே சென்றனர்.

அங்கு கிறிஸ்தவக்கோவில்கள் பல உள்ளன, அவையும் அதிகாலையிலேயே திறக்கப்பட்டு, அங்கு பிரார்த்தனைகள் நடப்பதைக்கண்டேன்.

ஆனால் சுமார் 6 மணிக்கு ஓர் இந்துக்கோவிலுக்குச் சென்றபோது, கதவு பூட்டப்பட்டிருந்தது. தாழ்வாரத்தில் இருவர் போர்த்துக்கொண்டு தூங்கினர்! இதைக்காண மனதுக்கு மிக வேதனையாக இருந்தது. சைவமக்கள் தங்கள் கோவில்களுக்கு அதிகமாகச் சென்றால் தான், கோவில்கள் புத்துயிர்பெறும். அங்குள்ள பூசகர்களுக்கும் உற்சாகமிருக்கும், சைவசமயமும் தழைத்தோங்கும். மற்ற சமயத்தவரின் முன்னேற்றத்தைக்கண்டாவது, இந்துக்கள் விழித்தெழவேண்டாமா?

* * *

விழித்தெழக்கூடிய சில நல்ல சகுனங்களை அங்கு கண்டேன், இதுவரை என்றுமே இல்லாதபடி சைவசமய சம்பந்தமான ஒரு மகாநாடு (சைவப் புலவர்கள் மகாநாடு) அங்கு இருநாட்கள் நடைபெற்றன. தமிழ்விழாக்கள் தான் இதுவரை அங்கு நடந்துள்ளனவேயன்றி சைவசமயசம்பந்தமான மகாநாடுகள் நடந்ததே இல்லையாம்! இவ்வருடம் முதல்முதலாக அங்கு நடைபெற்ற அம்மகாநாட்டுக்கு, நகரமண்டபம் நிறைய தாய்மார்களும் அன்பர்களும் உற்சாகத்துடன் கூடியிருந்தனர்.

யாழ்ப்பாணம், கொழும்பு முதலிய இடங்களிலிருந்தும் பல அறிஞர்கள் வந்திருந்தனர். சித்தாந்த சிரோன்மணி பெரியார் அருணாசல தேசிகமணி, மணி மணியான பல யோசனை கூறினார், பொதுமக்கள் ஒவ்வொரு யோசனையைக் கேட்டதும் உற்சாகமாகக் கைதட்டி, தங்கள் ஆமோதிப்பைத் தெரிவித்தனர்.

* * *

செய்யக்கூடாததான ஒன்பது காரியங்களைச் சொன்னார். என்ன தெரியுமா? 1. மிருகபலியிடல், 2. மதுபானம், 3. தீண்டாமை, 4. ஆபாசநடனம், 5. கோவில்களை வியாபாரத்தலமாக்குதல், 6. அங்கு ஆபாசப் பாடல்களை ஒலிபரப்புவது, 7. கோவில்களை அசுத்தப்படுத்தல், 8. திருவிழாக்களில் வீண்செலவு, வாணம், கடுதாசிகள், 9. சீதனம் கேட்பது.

சீதனம் கேட்கப்படாதென்று தேசிகமணி கூறியபோது மண்டபத்திலிருந்த இளம்பெண்கள் மிக மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் கரகோஷஞ்செய்ததைக் கண்டேன். மாணவர்களும் கைதட்டினர், இதைப்பற்றி சில புதுமைப்பெண்களைக் கேட்டேன். சீதன வழக்கத்தில் சில நன்மைகள் இருப்பதாயும், பெண்களுக்கு அது ஒரு பாதுகாப்பென்றும், ஆனால் விவாகத்தை ஒரு வியாபாரமாக்கி பெண்ணை இழிவுபடுத்தக் கூடிய அளவுக்கு அந்தப் பழக்கம் மிஞ்சிவிட்டதென்றும் கூறினர்.

சைவப்புலவர்மார் செய்ய

(4-ம் கலம் பார்க்க)

# "விரிந்த அடிப்படையில் உலகப் பிரச்னைகளை ஆராய வேண்டும் ஒற்றுமை காணமுடியாத விஷயங்களை விவாதிக்கலாகாது"

## அல்ஜியர்ஸ் மகாநாடு பற்றி திரு. சாஸ்திரி கெய்ரோவில் கருத்து

கெய்ரோ, ஜூன் 10

"விரிந்த அடிப்படையில் உலகப் பிரச்னைகளைப் பற்றி ஆராயவேண்டுமேயொழிய ஒருமைப்பாடு காணமுடியாத ஆசிய-ஆபிரிக்க நாடுகளுக்கிடையிலான சச்சரவுகளை இம்மாத இறுதியில் அல்ஜியர்ஸில் நடைபெறவிருக்கும் ஆசிய ஆபிரிக்க மகாநாடு விவாதிக்கக்கூடாது" என்று இந்தியப் பிரதமர் திரு லால்பகதூர் சாஸ்திரி நேற்று இங்கு நிருபர்களிடம் பேசுகையில் கூறினார்.

ஒட்டாவா செல்லும் வழியில் ஒருநாள் கெய்ரோவில் தங்கிய இந்தியப் பிரதமர், ஐக்கிய அரபுக்குடியரசுப் பிரதமர் அலிசப்ரியுடனும் ஜனாதிபதி நாசருடனும் ஆலோசனை நடத்தினார்.

வியட்நாம் பிரச்னை அல்ஜியர்ஸில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க மகாநாடு, இந்திய-பாகிஸ்தான் எல்லைத் தகராறு, சீன-இந்திய எல்லைப் பிரச்னை ஆகியவை பற்றி ஐக்கிய அரபுக்குடியரசுத் தலைவர்களுடன் திரு. சாஸ்திரி ஆலோசனை செய்ததாக அறியப்படுகிறது.

நாசரைச் சந்தித்தபின் திரு சாஸ்திரி நிருபர்களிடம் பேசுகையில் பல்வேறு விஷயங்கள் பற்றித் தாங்கள் ஆலோசனை செய்ததாகவும், இந்த ஆலோசனைகள் பயனுள்ளதாகவும் கூறினார், உலக சமாதானம் பற்றியும், நடுநிலைமைக் கொள்கை பற்றியும் தாங்கள் ஆலோசனை செய்ததாக அவர் சொன்னார்.

### நாஸருக்கு அழைப்பு

ஜனாதிபதி நாஸரை இந்தியாவுக்கு விஜயஞ்செய்யுமாறு தாம் அழைப்புவிடுத்ததாகவும், இதை அவர் ஏற்றுக்கொண்டாரென்றும் இன்னும் சில மாதங்களுக்குள் அவர் இந்தியாவுக்கு விஜயஞ் செய்வாரென்றும் திரு. சாஸ்திரி கூறினார்.

அல்ஜியர்ஸில் கூடும் ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டில் மலேசியாவையும், சோவியத்யூனியனையும் கலந்துகொள்ள அனுமதிக்கவேண்டுமென்று இந்தியா கோருமென்றும் திரு சாஸ்திரி சொன்னார். அல்ஜியர்ஸ் மகாநாட்டில் விரிந்த அடிப்படையில் உலகப் பிரச்னைகளை விவாதித்து உலக சமாதானத்துக்கான வழிவகைகளை ஆராயவேண்டுமென்றும், இந்திய-பாகிஸ்தான் எல்லைப்பிரச்னை போன்ற ஆசிய-ஆபிரிக்க நாடுகளுக்கிடையிலான சர்ச்சைக்குரிய பிரச்னைகளை விவாதிக்கக் கூடாதென்றும், இதுவே இந்தியாவின் நிலையென்றும் திரு. சாஸ்திரி சொன்னார். ஆசிய-ஆபிரிக்க மகாநாடு போன்ற பெரிய மகாநாடுகளில் ஏகமனதான முடிவு காணப்படுவது சாத்தியமில்லையென்றும் எனவே வாதப்போக்கு விட வேண்டிய விஷயங்களை இந்த மகாநாடு எடுத்துக்கொள்ளக் கூடாதென்றும் இந்தியப் பிரதமர் சொன்னார்.

வியட்நாம் பிரச்னைகள் கிளப்பப்பட்டால் வியட்நாமில் அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சியையே இந்தியா ஆதரிக்குமென்றும் திரு. சாஸ்திரி கூறினார்.

---

### இளைஞர்களுக்கு இரவு விடுதிகள்

ஹாம்பர்க் (டாட்), ஜூன் 10

மேற்கு ஜெர்மனியிலுள்ள இளைஞர்களுக்கான 692 இரவு நேரத் தங்கும் விடுதிகளில் சென்ற ஆண்டில் 60 லட்சம் இளைஞர்கள் தங்கியிருக்கிறார்கள். இவர்களில் 6 லட்சம் பேர் வெளிநாட்டு இளைஞர்கள். இதே காலத்தில் இரவு விடுதிகளில் தங்கும் ஜெர்மன் இளைஞர்களின் எண்ணிக்கை 10 லட்சம் உயர்ந்திருக்கிறது. ஆசியாவிலும், வட ஆபிரிக்காவிலும் உள்ள நாடுகளில் சர்வதேச இளைஞர் விடுதி ஸ்தாபனத்தின் ஆதரவில் இளைஞர் விடுதிகள் ஏராளமாகத் திறக்கப்பட்டிருக்கின்றன. இந்த விடுதிகள் அனைத்தும் ஜெர்மன் முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளன.

### 'ரெடிமெட்' சிறைச்சாலை

கோலோன் (டாட்), ஜூன் 10

'ரெடிமெட்' சிறைச்சாலைகள் மேற்கு ஜெர்மனியிலுள்ள கோலோன் நகரில் தயாரிக்கப்படுகின்றன. இந்தச் சிறைச்சாலையின் ஒவ்வொரு அறையும் 16 அடி நீளமும் 8 அடி அகலமும் கொண்டது; ஒவ்வொரு அறையிலும், கழுவுமிடம், காற்றோட்ட ஜன்னல், விளக்கு ரேடியோ எல்லாம் அமைந்துள்ளன. கைதிகள் கன்னம் வைத்தோ, உடைத்தோ ஓடிவிடாதபடி அறைச்சுவர்கள் கனமாக உள்ளது. இதுபோன்ற சிறைச்சாலை அறைகளை ஆயத்தமாகத் தயாரித்து வைத்திருக்கிறார்கள். எந்த நேரத்திலும் எத்தனை அறைகள் கொண்ட சிறைச்சாலையையும் சில மணி நேரத்தில் அமைத்துவிடலாம். 250 தொழிலாளர்களைக் கொண்டு கட்டவேண்டிய ஒரு சிறைச்சாலையை 40 பேரைக் கொண்டு உருவாக்கிவிடலாம்.

---

# லண்டனில் நேரு நினைவு பொருட்காட்சி

லண்டன், ஜூன் 10

நேரு நினைவுப் பொருட்காட்சியொன்று இன்று இங்கு ஆரம்பமானது. பிரிட்டிஷ் பிரதமர் திரு வில்சன் இப்பொருட்காட்சியைத் திறந்து வைத்தார். இவ்வைபவத்தில் இந்திய தகவல் மந்திரியும் நேருவின் புதல்வியுமான திருமதி இந்திராகாந்தி கலந்து கொண்டார்.

உலகெங்குமிருந்து திரட்டப்பட்ட நேருவின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட 25,000 புகைப்படங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 1300 புகைப்படங்கள் இப்பொருட்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. நேருவின் இளமைப்பருவம், இங்கிலாந்தில் அவரது ஏழாண்டு வாழ்க்கை, இந்திய விடுதலைப் போராட்டத்தில் அவர் கொண்ட பங்கு ஆகியவைகளை இப்புகைப்படங்கள் சித்தரிக்கின்றன. மவுண்ட்பேட்டன் பிரபுவின் தலைமையிலுள்ள ஒரு குழு இப்பொருட்காட்சியை ஒழுங்கு செய்துள்ளது. இப்பொருட்காட்சி இரண்டு வாரகாலம் நடைபெறும்.

---

மொழிப்பிரச்னை

# காரியக்கமிட்டி தீர்மானத்தில் அண்ணாதுரை, டாக்டர் சி. பி. அதிருப்தி

சென்னை, ஜூன் 10

மொழி பிரச்னை பற்றிய காங்கிரஸ் காரியக்கமிட்டியின் தீர்மானம் இந்தப் பிரச்னையைத் தீர்க்கவில்லை என்று திராவிட முன்னேற்றக்கழக பொதுக்காரியதரிசி திரு. சி. என். அண்ணாதுரை ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உண்மையில் பிரச்னைக்கு நிலையான தீர்வு காண்பதில் கமிட்டி கவனம் செலுத்தவில்லை எனத் தோன்றுகிறது. காங்கிரஸ் காரியக்கமிட்டி நேருஜியின் உறுதிமொழிக்கு மதிப்புக் கொடுத்து நடக்கவில்லை.

ஹிந்தி பேசாத மக்களின் சம்மதத்தைப் பெறும்வரை ஹிந்தி ஆட்சி மொழியாகத் திணிப்பதை நிறுத்திவைக்க வேண்டும். அதுவரை ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்கவேண்டும்.

எல்லா தேசிய மொழிகளையும் ஆட்சிமொழியாக்கி, அவை அனைத்துக்கும் சம அந்தஸ்து அளிப்பதன் மூலமே மொழி பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வு காண முடியும்; இது சாத்தியமான தீர்வுதான்.

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி மங்கிவிட்டதாக காங்கிரஸ் காரியக்கமிட்டி தவறாக எண்ணிவிடக்கூடாது என்றும் எல்லைப்புறங்களில் அபாயம் ஏற்பட்டிருப்பதை உணர்ந்தே கிளர்ச்சி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்றும் திரு. அண்ணாதுரை தெரிவித்துள்ளார்.

### டாக்டர் சி. பி. கருத்து

அண்ணாமலைச்சர்வகலாசாலையின் உப அத்யட்சகர் டாக்டர் சி. பி. ராமசாமிஐயர் மொழிப் பிரச்னையைப் பற்றி காங்கிரஸ் காரியகமிட்டி நிறைவேற்றியுள்ள தீர்மானம் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளார்.

'14 பிராந்திய மொழிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருப்பதால் அந்தந்த இடங்களிலும் பிராந்தியமனப்பான்மைக்கும் பிரிவினைச் சக்திகளுக்கும் ஊக்கம் ஏற்படும். மற்றும் நமது நாட்டின் பிரதேசசுதந்திரத்துக்கும் ஐக்கியத்துக்கும் பல வழிகளில் அபாயம் ஏற்பட்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் ராஜ்யங்களுக்கிடையே ஒற்றுமையும், ஒத்துழைப்பும் அவசியம்' என அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

சர்வதேச உறவை முன்னிட்டும் நாட்டின் கல்விக்கு உறுதியும் எளிதாகவும் பிழையின்றியும் ஆங்கிலத்தில் பேசத் தெரியவேண்டும் என்பது முக்கியமாகும் என்றும் டாக்டர் சி. பி. ராமசாமிஐயர் குறிப்பிட்டுள்ளார்.

---

### அம்புலன்ஸுக்கு வியாதி!

மூல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் சேவை செய்த 'அம்புலன்ஸ்' சில காலமாகப் பழுதடைந்து திருத்தாத நிலையில் இருக்கின்றது. இதனால் ஆஸ்பத்திரியில் இருந்து நோயாளரை யாழ்ப்பாணம் அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

---

# ஆட்களில்லை; யந்திரம் கடை நடத்தும் அதிசயம்!

## சாமான் கொடுக்கிறது; பில் எழுதுகிறது, பாக்கிச் சில்லறையும் தருகிறது!

வீஸ்பாடன் (டாட்) ஜூன் 10

உலகிலேயே முதலாவது தானே இயங்கும்கடை ஒன்றை மேற்கு ஜெர்மனியிலுள்ள வீஸ்பாடன் நகரில் அண்மையில் திறந்திருக்கிறார்கள். இந்தக் கடையில் ஆட்களே கிடையாது. வாடிக்கைக்காரர்களுக்குத் தேவையான சாமான்களை எடுத்துக்கொடுப்பது, பில் போடுவது, பணம் வாங்குவது, பாக்கிச்சில்லறை கொடுப்பது, ரசீதுகொடுப்பது ஆகிய எல்லா வேலைகளையும் இங்கு அமைக்கப்பட்டுள்ள மின்காந்த சாதன அமைப்புச்செய்துமுடிக்கிறது.

### இயந்திரமயம்

இதைச் சிறு கடை என்று சொல்லமுடியாது. இதை ஒரு குட்டி மார்க்கெட் என்றே சொல்லலாம். இங்கு வருபவர்களின் எண்ணிக்கையை ஒரு சிறு மின்காந்த சாதனம் பதிவு செய்கிறது. இந்தச் சாதனத்தின் அனுமதி இல்லாமல் யாரும் இக்கடைக்குள் நுழையவோ, வெளியில் செல்லவோ முடியாது. கடைக்குள் நுழைந்தவுடன், அங்கு ஒரு யந்திரத்தில் தொங்கும் கயிற்றை இலேசாக இழுக்கவேண்டும் உடனே ஒரு சுழலும் கதவுசுழன்று வழிவிடுகிறது. உள்ளே சென்றவுடன் அங்குள்ள ஆயிரத்துக்கும் அதிகமான பொருள்களைப் பார்த்து வேண்டியனவற்றைத் தேர்ந்தெடுக்கலாம். தேவையான சாமானை எடுத்ததும், அதை ஒரு இயந்திரத்தில் வைத்து, அந்தச்சாமான் இருந்த இடத்தில் உள்ள விசையைஅழுத்தியதும், அதன் விலைச்சீட்டு வெளிவரும். பில்லைக்கொடுத்துப் பணம் செலுத்த மற்றொரு இயந்திரம் உள்ளது. இதில் பில்லையும் பணத்தையும் நுழைத்தால் பாக்கிச் சில்லறையும் பார்சல் செய்த சாமானும் கைக்குவருகிறது. அத்துடன் பணத்திற்கான ரசீதும் வருகிறது. வாசலிலுள்ள யந்திரத்தில் இந்த ரசீதைப் போட்டால் கதவு திறந்துவெளியே செல்ல வழிவிடுகிறது. பணம் செலுத்தாமல் ஏமாற்றுவதை இந்த இயந்திரம் தடுக்கிறது.

### இரவும் பகலும்

இங்குள்ள பல்வேறு இயந்திரங்கள் மிகவும் நுட்பமாகவும் துரிதமாகவும் இயங்குகின்றன. எனினும் பணம் வாங்கும் இயந்திரத்தில் சில குறைபாடுகள் உள்ளன. இது புதிய நோட்டுக்களுக்கு மட்டுமே சில்லறை கொடுக்கிறது. பழைய நோட்டுகளுக்கு சில்லறை கொடுக்காது எனவே நாணயங்களை மட்டுமே இதில்போட முடியும். கூடிய விரைவில் எல்லா நோட்டுகளுக்கும் சில்லறை கொடுக்கும் வண்ணம் இந்த இயந்திரம் மாற்றியமைக்கப்படும். இந்தக்கடை 24 மணி நேரமும் திறந்திருக்கிறது. இங்கு இரவு பகல் எந்தநேரமும் வந்து சாமான்கள் வாங்கிக்கொள்ளலாம். இங்குவேலை பார்க்க ஆட்கள் தேவை இல்லாததால் நிர்வாகச்செலவு அறுபது வீதம் குறைவதாக கடைஉரிமையாளர் கூறுகிறார்.

---

### காய்கறி தட்டுப்பாடு

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவு விற்பனை இலாகா கடையில் மரக்கறி கிடைப்பதில்லை. இதனால் பொதுமக்கள் சந்தையில் இரட்டிப்பு விலைகொடுத்து மரக்கறி வாங்கவேண்டிய நிலைஏற்பட்டுள்ளது.

---

# பலதேச உதவி கோரப்போவதாக வியட்காங் அறிவிப்பு

சைகோன், ஜூன் 10

வியட்நாமில், தென்வியட்நாம் அரசாங்கம் உதவிகோரினால் தென்வியட்நாம் அரசாங்கத் துருப்புக்களுக்கு உதவியாக அமெரிக்கத் துருப்புகளும் வியட்காங் கம்யூனிஸ்டுகளை எதிர்த்துத் தரையில் யுத்தம்செய்ய அமெரிக்கத் துருப்புகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாக வெளியான செய்தியைத் தொடர்ந்து வியட்காங் நேற்றும் நட்பு நாடுகளிலிருந்து 'தொண்டர்களை' உதவிக்கு அழைக்கப் போவதாக வியட்காங் அறிவித்துள்ளது. தாங்கள் பலதேச உதவியைக் கோரப் போவதாக வியட்காங் வெளியிட்ட அறிக்கையை ஹனோய் வானொலி தெரிவித்தது.

இதற்கிடையில் வாஷிங்டனில் வெள்ளைமாளிகையிலிருந்து வெளியான ஒரு அறிக்கை தென்வியட்நாமில் டானங் போன்ற அமெரிக்க நிலைகளைப் பாதுகாப்பதுதான் தென்வியட்நாம் துருப்புக்களின் பணியென்று கூறுகின்றது. பாதுகாப்பது தான் அவர்களின் பணியேயொழிய தாக்குதல் நடத்துவது அவர்கள் வேலையல்லவென்று கூறும் அந்த அறிக்கை தென்வியட்நாமில் அமெரிக்கத் துருப்புக்களின் நிலைபற்றி மாற்றமெதுவும் செய்யப்படவில்லையென்றும் கூறுகிறது.

நேற்று வியட்நாமில் இருதரப்பினருக்கிடையிலும் நடைபெற்ற சண்டையில் இருபகுதியினருக்கும் பெருத்த சேதமேற்பட்டது. இரு அமெரிக்க ஜெட் போர்விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

## தமிழரசுக்கட்சி கிளை அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், வியா

தமிழரசுக் கட்சியின் கிளை அங்குரார்ப்பணக் கூட்டமொன்று புத்தமேனி விநாயகர் ஆலய முன்றலில் திரு. நா இரத்தினம் தலைமையில் நடைபெற்றது. கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை, உடுவில் எம். பி. திரு. வி தர்மலிங்கம் தமிழரசு வாலிப முன்னணிச் செயலாளர் திரு க. சிவனந்தசுந்தரம் ஆகியோர் கிளைகள் அமைக்க வேண்டிய அவசியத்தையும் தற்போதைய அரசியல் நிலைமை பற்றியும் விளக்கினர்.

மேற்கண்டோர் கிளையின் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர், தலைவர் திரு. நா. சிவலிங்கம் உபதலைவர் திரு. இ. கந்தசாமி, காரியதரிசி திரு இ. நடராசா உப-காரியதரிசி திரு. பொ தனபாலசிங்கம், தனாதிகாரி திரு. வே. குலரத்தினம் 8 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## தாமதத்தில் ஒரு ரகம்

சுழிபுரம், வியாழன்

சங்கானையிலிருந்து மூளாய் வரை வஸ்தரித்து இடைவிட்டு பஸ்வண்டிகளை சேவைக்குவிடும் வேகசகுடன் வீதி ஓரத்தில் நின்ற பெரியமரங்கள் தறிக்கப்பட்டன மரங்கள் தறித்து இரண்டுமாதத்துக்கு மேலாகியும் இதுவரை பஸ்வண்டிகள் சேவைக்கு விடப்படவில்லையென்றும் அதேபோல் தறிக்கப்பட்ட மரங்கள் வீதிஓரத்தில் இருந்தும் அப்புறப் படுத்தப்படவும் இல்லை என்றும் அறியப்படுகிறது. இதனால் இப்பகுதிமக்கள் பல கஷ்டத்துக்குள்ளாவதுடன் போக்குவரத்துவண்டிகளும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளன.

## சமாதானசபைகள் வட,கிழ்மாகாணங்களில் நிறுவப்படும்

குரும்பசிட்டி; வியா

வடக்கு—கிழக்கு மாகாணங்களில் சுமார் 200 சமாதான சபைகள் நிறுவுவதற்கான ஏற்பாடுகளை நீதி அமைச்சு கவனம்செலுத்திவருகின்றது சமாதான சபைகளை அமைப்பதற்கு ஏற்ற சாத்தியக்கூறுகளை பரிசீலனை செய்து ஆராய்வதற்காக நீதியமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு.குணவர்த்தனா இம்மாத நடுப்பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் ஏற்கனவே சமாதானசபைகள் நிறுவப்பட்டுள்ளன.

## சேவைநலம் பாராட்டு

குமுழமுனை, வியா

தண்ணீரூற்று சைவப்பாடசாலையில் கடந்த 30 ஆண்டுகளாக ஆசிரியையாக கடமையாற்றி தற்போது பதவியில் இருந்து ஓய்வுபெறும் திருமதி அருணம்மா அண்ணாமலையின் சேவையைப் பாராட்டி சைவ

## செய்திச் சுருக்கம்

### தலைவரின் யோசனை

தமிழ் சமூகத்தைச் சேர்ந்த சிங்களமும் சிங்களக் குழந்தைகளுக்கு தமிழும் கற்பிக்கவேண்டியது மிகமிக முக்கியமாகும் என்று கிளிநொச்சி கிராம சபைத்தலைவர் திரு. சி. டி. ராஜன் வட்டக்கச்சி அடலன் மும்மொழி கல்வி மன்ற புதிய கட்டடத்தைத்திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார். இந்நாட்டில் வாழும் இருசமூக மக்களும் பேசும் மொழி இவை, எந்த பகுபாடுமின்றி ஐக்கியம் அவசியமென்றும் அவர் கூறினார்.

* * *

### கொள்கையில் மாற்றம்

சமசமாஜக்கட்சியின் மொழிக் கொள்கையில் மாற்றமேற்பட்டதென்றும், சம அந்தஸ்து என்ற நிலைமாறி, நியாயமான அளவு தமிழ் உபயோகத்துடன் சிங்களம் மட்டும் என்ற நிலை ஏற்படலாம் என்றும் தெரியவருகிறது.

இந்த அடிப்படையில் உருவாக்கப்பட்ட தனி தீர்மானமொன்று கட்சியின் மத்திய குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

* * *

### தனிப்பட்ட பாடசாலைகள்

"தனிப்பட்ட பாடசாலைகள் நாட்டுக்கு பெரும் சேவைகள் செய்துள்ளன. இலங்கையின் தேசிய தலைவர்களில் பலர் தனிப்பட்ட பாடசாலைகளில் பயின்றவர்களே. உயர்தரம் ஏற்படுவதற்கு போட்டி அவசியம். ஆதலால் தனிப்பட்ட பாடசாலைகள் இயங்குவதை நான்வரவேற்கிறேன்" என்று மொரட்டுவை சென் செபஸ்தியன் கல்லூரி பழைய மாணவர்சங்க வருடாந்த விருந்துபசாரத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்வி மந்திரி திரு. இரியகொல்ல கூறினார்.

* * *

### மாமி—மருமகன் தற்கொலை

சமூகத்தின் சந்தேகப்பார்வை எதிர்நோக்கமுடியாத திருகோணமலையை சேர்ந்த மாமியும் மருமகனும், பொகந்தலாவைக்குச்சென்று தற்கொலை செய்துகொண்டனர்.

20 வயதான ஆர். விஜயனும் அவரது மாமியாரான 40 வயதான பகவதி பிள்ளையும்,பெற்றோர்களினதும் ஊரவர்களினதும் கடுஞ் சொற்களைத் தாங்காது, கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டனர். பொலிஸார் ஒன்று கடிதங்களை ஒரு சூட்கேஸில் கண்டெடுத்தனர், தாங்கள் நிரபராதிகள் என்று அக்கடிதத்தில் எழுதப்பட்டுள்ளனவாம்.

பாடசாலை மண்டபத்தில வித்தியானந்த கல்லூரி அதிபர் திரு. சி இராசநாயகம் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. பாடசாலை மாணவர்களின் கதம்பநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## இந்து வாலிபர் சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நுணாவில் இந்து வாலிபர் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. சங்கத்தின் உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

அமைப்பாளர்கள்: திருவாளர்கள் செ இலகுநாதன், க மு. வித்தம்பி; தலைவர்: திரு க. வேலாயுதம், உபதலைவர்: திரு க. சபாரத்தினம்; காரியதரிசி: திரு ம. பத்மநாதன், உபகாரியதரிசி: மு பரமலிங்கம்; பொருளாளர்: ம. மகாலிங்கம் ஆகியோர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.



## மேலை நாட்டில் வர்த்தகப் பயிற்சி

தொண்டமானாற்றைச் சேர்ந்த திரு. சிறீபத்மநாபன் தொழிற்கல்வி பெறுவதற்காக லண்டனுக்குப் பயணமானார். பிரிட்டனிலும் ஐரோப்பாவிலும் வர்த்தக கைத்தொழில் கல்விச் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொள்வதற்காக இங்கிலாந்திற்கு பிரயாணம் செய்துள்ள திரு சிறீபத்மநாபன் இரண்டு வருடங்கள் பிரிட்டனில் தங்குவார். யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர் தொண்டமானாற்றைச்சேர்ந்த திரு வீரகத்திப்பிள்ளை இராசசேகரத்தின் புதல்வனும் கொழும்பு செட்டியார்தெரு சேகரம் அண்ட சன்ஸ் என்ற வர்த்தக ஸ்தாபனத்தின் சொந்தக்காரரான திரு. வடிவேற்கரசனின் சகோதரருமாவார்.

## கடிதங்கள் மறைகின்றன

கொழும்பு, வியாழன்

கடிதங்கள் காணாமற்போவதாக மாதந்தோறும் பொதுமக்களால் மூன்றாறுக்கு மேற்பட்ட புகார்கள் செய்யப்பட்டு வருவதாக அறியப்படுகிறது வெளிநாட்டு சாதாரண கடிதங்கள், உள்நாட்டு, வெளிநாட்டுத் தபால்கள், உள்நாட்டு வெளிநாட்டு பார்சல்கள், பத்திரிகைகள் தினமும் காணாமல் போகின்றன. பொதுமக்கள் இதுபற்றி புகார் செய்யப்படும்போதே தபால் அதிகாரிகளுக்குத் தெரியவருகிறது.

## பால்மாவு இறக்குமதி பால்சபை செய்யாது

பம்பலப்பிட்டி, வியா

எந்த ரகபால் மாவையும் இறக்குமதி செய்ய பால்சபை இனி அனுமதிக்கப்படமாட்டாது என அறியப்படுகிறது.

பால்சபை உள்ளூரில் மட்டுமேபால் வாங்குவதையும்விநியோகிப்பதையும் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற கமவிவசாய மந்திரி கொண்டுவந்த தீர்மானத்தைத் தொடர்ந்தே பால்மா இறக்குமதி இனிமேல் பால்சபையால் மேற்கொள்ளப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பால்மாவு இறக்குமதியை தனியார்துறை வர்த்தகர்களிடமே ஒப்படைக்கவும் மந்திரி முடிவுசெய்துள்ளார்.

## புதிய வித்தியாதரிசி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவரும் ஏழாலை மைலிட்டி மத்திய மகாவித்தியாலய அதிபருமாகிய ஜனாப் எம் எம். மக்கூர் ஆலிம் சாதப முதல் திருகோணமலை மூதூர்ப் பகுதிக்கு வித்தியாதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மன்னார் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு மகா வித்தியாலயம் ஆகியவைகளில் அதிபராக பலவருடங்கள் கடமையாற்றியிருக்கிறார் இவர் சமய சமூக, கலை சார சேவைகளில் பெருந்தொண்டாற்றிவருகிறார். யாழ்ப்பாண முஸ்லிம் மஜ்லிஸின் உபபோஷகராகவும் இருந்துவருகிறார்.

## பாடசாலைகளில் சட்டதினம்

ஊர்காவற்றுறை, வியா.

நயினாதீவு இயங்கும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் சட்டதினம் கல்லூரி அதிபர் வணபிதா எம் ஜே மரியாம்பிள்ளை தலைமையில் அனுட்டிக்கப்பட்டது கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்ட சட்ட தினக்கூட்டத்தில் ஆசிரியர் திரு. எம் நடராசா விரிவுரை நிகழ்த்தினார்.

சாவகச்சேரி, வியாழன்

சரசாலை ஸ்ரீ வேலாயுத வித்தியாசாலையில் சென்ற வெள்ளிக்கிழமை சட்டதினம் கொண்டாடினர் வித்தியாசாலைத் தலைமைஆசிரியர் திரு செ சிவப்பிரகாசமும், ஆசிரியர் திரு சதாசிவம்பிள்ளையும் சட்டத்தின் நன்மைகளைப் பற்றி மாணவருக்கு விளக்கிக் கூறினர்.

REGAL - JA
NOW SHOWING
Jane Fonda
in
Sunday in New York
(Metro color)
[ADULTS ONLY]

மருந்து

## சேமிப்பதற்கான இடங்கள்

கொழும்பு, வியாழன்

உலக சுகாதார ஸ்தாபனத்தைச் சேர்ந்த வைத்திய நிபுணரான திரு பானிபிக்கரா மருந்துகள் சம்பந்தமான ஆலோசனையளிக்க, அடுத்த மாதம் இங்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மருந்துவகைகளை சேமித்து வைப்பதற்கு தகுதியான இடங்களை சுகாதார இலாகா நிபுணரின் வருகைக்கு முன் ஆராயுமென்றும் அறியப்படுகிறது.

## கைத்தொழில் முழுக்கள் மந்திரி நியமித்தார்

கொழும்பு, வியாழன்

எட்டுக் கைத்தொழில் குழுக்களை கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனா நேற்று தெரிவுசெய்துள்ளார் கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள திட்டங்களுக்கு இக்குழு ஆலோசனை செய்யும்

இலங்கையிலுள்ள சகல கைத்தொழில் கூட்டுஸ்தாபனங்களின் மகாநாட்டிலேயே நேற்றைய முடிவை மந்திரி எடுத்தார்.

## 'மீண்டும் வேலை வழங்குக'

பம்பலப்பிட்டி, வியாழன்

சிங்களமொழித் தகுதி இல்லாத காரணத்தினால் சென்ற அரசாங்கத்தில் வேலையிலிருந்து ஓய்வு வழங்கப்பட்ட 4000 அரசாங்க சேவை ஊழியர்கள் தம்மை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளுமாறு கோரியுள்ளனர்.

இவர்கள் இதுசம்பந்தமாக பிரதமருக்கும் ராஜாங்க மந்திரி, நிதிமந்திரி, நீதிமந்திரி ஆகியோருக்கும் மஜர் ஒன்றை ஏற்கனவே சமர்ப்பித்துள்ளனர்.

இவர்கள் தமது கோரிக்கைக்கு ஆதரவு தருமாறு எம். பிக்களையும் செனட்டர்களையும் வேண்டியுள்ளனர்.

வெற்றிகரமான 5வது வாரம்!
ஜேட்லி பிளாசா வெம்பிலி ராஜ்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கண்டி) (நீர்கொழும்பு)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30 பி. ப. 2-30, 6-30, 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ். எஸ். ஆர்., நாகேஷ்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு

இளநரையா?
உடனடி நிவாரணத்திற்கு
இன்றே
உங்கள் வியாபாரியிடம் வாங்கிப் பாவியுங்கள்!
அருத எண்ணெய்
அறுகம் பச்சை எனும் தமிழ் மூலிகையும்
வேறு 44 ஆயுர்வேத மூலிகைகளும் சேர்ந்தது.
கண் — தலை — காது — மூக்கு
சம்பந்தப்பட்ட சகல வியாதிகளுக்கு சாலச் சிறந்தது!
—சிறுவர் முதல் பெரியோர்வரை பாவிக்கலாம்—
தயாரிப்பாளர்:
பி. எம். திசாநாயக்க
அருத எண்ணெய் தொழிலகம், கம்பளை. போன்: 454
—யாழ்ப்பாணத்திற்கு ஏகவிநியோகஸ்தர்கள்—
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(டெலிபோன்: 541, 7068)

# விளம்பரம்

## ஊறணி
## அர்ச்: அந்தோனியார் திருநாள்

இவ்வருடம் ஆனிமாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேஸ்பரும் சுற்றுப்பிரகாரமும். 14-ம் திகதி திங்கட்கிழமை பாடற் பூசையும நடைபெறும். 405

## கச்சாய் கிராமசபை ஆயுள்வேத வைத்தியசாலை

கச்சாய் கிராமசபையின் ஆயுள்வேத வைத்தியசாலைக்குத் தேவையான மருந்துகளின் விலைப்பட்டியல்கள் கச்சாய் கிராமசபை அக்கிராசனரால் கோரப்படுகின்றது. விலைப்பட்டியல்கள் யாவும் கச்சாய் கிராமசபைத்தலைவருக்கு 28-6-65க்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

ஒப்பம்
அ. த. சிதம்பரப்பிள்ளை,
தலைவர்,
கச்சாய் கிராமசபை.
கிராமசபை அலுவலகம்,
கச்சாய்-கொடிகாமம்,
9 6-65 413

## யாழ்ப்பாண மாநகரசபை கேள்வி அறிவித்தல்

முற்றவெளி வீதியில் மத்திய நூல்நிலையத்திற்கு முன்னால் 200 அடி நீளத்திற்கு அணைக்கவரைத் தொடர்ந்து கட்டுவதற்கும் 250 அடி நீளத்தில் தற்போதிருக்கும் கவரை 1-0 உயரத்திற் உயர்த்துவதற்கும் 25-6-65-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை பதிவுபெற்ற ஒப்பந்தக்காரரிடமிருந்து இரண்டு பிரதிகளுடன் கூடிய அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரத்தின் விலையாக ரூ [illegible] ம், கேள்வி வைப்புப் பணமாக ரூ 50-00 யும் செலுத்தி 21-6-65-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை மாநகரசபை மராமத்து இஞ்சினியரிடம் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரத்தின் விலை திரும்பத் தரப்படமாட்டாது. ஆனால் ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விக்காரர் உடன்படிக்கையைச் செய்து கொண்டதும் கேள்வி வைப்புப்பணம் திரும்பத் தரப்படும்.

3. ஏனைய விபரங்களை அலுவலக நேரத்தில் மாநகர மராமத்து இஞ்சினியரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கட்சன் செல்வராசா,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
4-6-1965 414


## வானொலி நிகழ்ச்சிகள்
### வெள்ளி 11-6-65
### கொழும்பு

(செய்திகள் காலை 7-15 பகல் 12-45; மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவசந்திங்கிலை, 6-55 இஸ்லாமியசந்திங்கிலை. 7-00 துதிப்பாடல்கள், 7-30 பக்திப்பாடல்கள், 8-00 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை,

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 காதல் வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானாஞ்சலி, 715 கதாப்பிரசங்கம். 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 நேயர்விருப்பம், 10-00 கிளாரினெட், 10-15 தேர்ந்த இசை.

# வவனியா, மன்னர் மாவட்ட உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

வவனியா, வியாழன்

சென்ற வார இறுதியில் வவனியா தமிழ் மகாவித்தியாலய விளையாட்டுத்திடலில் நடைபெற்ற மன்னார், வவனியா மகாவித்தியாலய விளையாட்டுப் போட்டிக்கு வவனியா மன்னார் மாவட்ட வித்தியாதிபதி திரு. ஆர். ஞானசேகரம் தலைமைவகித்தார்.

வவனியா தமிழ் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் கே. பேரம்பலம் மேற்பிரிவு நீளம்பாய்தலிலும், கோல் மிதித்துப் பாய்தலும் சென் சேவியர் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் லூயிஸ்பிள்ளை கீழ்ப்பிரிவு நீளம் பாய்தலிலும், செல்வன் எம். அருளானந்தம், பரிதி வட்டம் எறிதலிலும், செல்வன் ஏ. ரவீந்திரன், 200 மீற்றர் கீழ்ப்பிரிவு ஓட்டத்திலும், புதிய சாதனைகளை நிலைநாட்டினர்.

ஆண்களில் கூடிய புள்ளிகளை எருக்கலம்பிட்டி மகாவித்தியாலம் பெற்றதின் காரணமாக வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக்கொண்டது. பெண்களில் வவனியா தமிழ் மகாவித்தியாலயம் கூடிய புள்ளிகளைப் பெற்றதின் காரணமாக வெள்ளிக்கிண்ணத்தை சுவீகரித்தது.

போட்டிகளில் முதலிடம் பெற்றோர் விபரம்வருமாறு:-

மேற்பிரிவு ஆண்கள் பரிதி வட்டம் எறிதல்—செல்வன் எஸ் சிங்கராசா முல்லைத்தீவு மகாவித்தியாலயம்

கீழ்ப்பிரிவு ஆண்கள் நீளம் பாய்தல்—செல்வன் எம் எல் லூயிஸ்பிள்ளை சென் சேவியர் கல்லூரி

உயரம்பாய்தல் ஆண்கள் மேற்பிரிவு—செல்வன் கே பேரம்பலம் வவனியா தமிழ் மகாவித்தியாலயம்

மேற்பிரிவு குண்டெறிதல்—செல்வன் எஸ் சிங்கராசா முல்லைத்தீவு மகாவித்தியாலயம்

மேற்பிரிவு தடியூன்றிப்பாய்தல்— செல்வன் ஏ குணலிங்கம் முல்லைத்தீவு மகாவித்தியாலயம்

கீழ்ப்பிரிவு ஆண்கள் பரிதி வட்டம்எறிதல்—செல்வன் எம் அருளானந்தம் முல்லைத்தீவு மகாவித்தியாலயம்

கோல் மிதித்துப் பாய்தல் மேற்பிரிவு ஆண்கள்—செல்வன் கே பேரம்பலம் வவனிய மகாவித்தியாலயம்

கீழ்ப்பிரிவு குண்டெறிதல்—செல்வன் எம் அருளானந்தம் முல்லைத்தீவு தமிழ் மகாவித்தியாலயம்

கீழ்ப்பிரிவுபெண்கள் 4×200 அஞ்சலோட்டம்—காமினி வவனியா

மேற்பிரிவு பெண்கள் 4X100 அஞ்சலோட்டப் போட்டி—வவனியா தமிழ் மகாவித்தியாலயம்

கீழ்ப்பிரிவு ஆண்கள் 4×200 அஞ்சலோட்டப் போட்டி—எருக்கலம்பிட்டி மகாவித்தியாலயம்

மேற்பிரிவு ஆண்கள் 400 மீற்றர் ஓட்டப்போட்டி—செல்வன் எஸ் பிரான்சிஸ் சேவியர் சென் சேவியர் கல்லூரி

மேற்பிரிவு 100 யார் ஓட்டப் போட்டி பெண்கள்:- செல்வி கு. அற்புதம் தமிழ்மகாவித்தியாலயம் வவனியா,

மேற்பிரிவு ஆண்கள் 100 மீற்றர் ஓட்டப்போட்டி— செல்வன் எம கட்சி முகமடின், எருக்கலம்பிட்டி, மகாவித்தியாலயம்.

கீழ்ப்பிரிவு ஆண்கள் 10 மீற்றர்—எம,எ,ஜபரசர்,எருக்கலம்பிட்டி.

மேற்பிரிவு ஆண்கள் 800மீற்றர்— செல்வன் யே யே அந்தோனிதுரை, சென்சேவியர் கல்லூரி.

உயரம்பாய்தல் கீழ்ப்பிரிவு— செல்வன் எம் எ தாகீர், எருக்கலம்பிட்டி மகாவித்தியாலயம்.

கீழ்ப்பிரிவுப்பெண்கள் 150 மீற்றர்— செல்வி ரீ உலகேசுவி, தமிழ்மகாவித்தியாலயம் வவனியா.

மேற்பிரிவு பெண்கள் 200 மீற்றர்— செல்வி கே வி கமலாவதி, காமினி வவனியா

கீழ்ப்பிரிவு ஆண்கள் 200 மீற்றர் போட்டி— செல்வன் எ, ரவீந்திரன், தமிழ்மகாவித்தியாலயம் வவனியா.

மேற்பிரிவு ஆண்கள் 200 மீற்றர் போட்டி— செல்வன் ஏ செய்யதுமுகமெட், வவனியா தமிழ் மகாவித்தியாலயம்

மேற்பிரிவு 1500 மீற்றர் ஆண்கள் போட்டி—செல்வன் வருதின், எருக்கலம்பிட்டி மத்தியமகாவித்தியாலயம்

மேற்பிரிவு ஆண்கள் நீளம் பாய்தல் போட்டி— செல்வன் கே பேரம்பலம், வவனியா தமிழ்மகாவித்தியாலயம்

மேற்பிரிவு பெண்கள் 4X100 மீற்றர் அஞ்சலோட்டம்— வவனியா மகாவித்தியாலயம்

மேற்பிரிவு ஆண்கள் 4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்—சென் சேவியர் கல்லூரி

கீழ்ப்பிரிவு ஆண்கள் 4X100 மீற்றர் அஞ்சல்ஓட்டம்— எருக்கலம்பிட்டி மத்தியமகாவித்தியாலயம்

மேற்பிரிவு 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்— சென் சேவியர்,

---

## பரீட்சை முடிவுகள்

வெள்ளவத்தை, வியா

கொழும்பு விவேகானந்த சபையினரால் 1964-ம்ஆண்டு நடாத்தப்பட்ட சைவசமயப் பரீட்சை முடிவுகள் எல்லாப் பாடசாலைகட்கும், சங்கங்கட்கும் அனுப்பப்பட்டுள்ளன.

இப் பரீட்சையில் ஏழு பிரிவுகளிலும் பங்குபற்றிய 27,025 மாணவமாணவிகளுள் 12,435 பேர் சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்தவர்களின் சான்றுப்பத்திரங்களும், பரிசில்களும் விரைவில் அனுப்பி வைக்கப்படும்

1963-ம் ஆண்டுப்பரீட்சையில் தோற்றிய21, 973 மாணவமாணவிகளில் 10,479 பேர் சித்தியடைந்துள்ளனர். அவர்களின் சான்றுப்பத்திரங்கள் பதிவுத்தபால்மூலம் இவ்வாரம் அனுப்பப்படுகின்றன. இப் பரீட்சைக்குரிய பரிசில்கள் இம்மாதமுடிவிற்குள் அனுப்பி வைக்கப்படும்.

---

## "ஆன்மீகஞானிகளும் அரசியல்வாதிகளும்"

வெள்ளவத்தை, வியா

"எல்லா மதத்தைச் சேர்ந்த ஆன்மீகத் தலைவர்களும் ஓர் உண்மையைப் பெரிதும் வலியுறுத்தினர்கள். எல்லா மக்களும் ஓரே இனத்தைச் சேர்ந்தவர் ஓரே குலத்தினரென்ற பேருண்மையே அவர்கள் உணர்த்திய தத்துவமாகும். அரசியல்வாதிகள் தங்களது சொந்த நலனுக்காக மதம், சாதி, இனம் ஆகிய பேதத்தை வளர்க்கிறார்கள். நாம் முன்னேறவேண்டுமானால் நாட்டிலே இன, மத ஒற்றுமை மிகவும் அவசியம். இதனை எப்படிக் கொண்டுவருவது என்று எனக்குத் தெரியவில்லை. புத்தரும், யேசுவும் எல்லா மக்களுக்கும் அறிவூட்டினர்; போதித்தனர். புத்தரும் யேசுவும் மதங்களைக் கடந்துநின்றனர். நாம் மக்களைப் பிரிப்பதற்காக மதத்தை உபயோகிக்கிறோம். நாமே எம்மைப் புரிந்துகொண்டால் எமது சமூகத்தை நாம் முன்னேற்றலாம்" என்று கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல, இம்மாதம் 5ந் தேதி றோயல்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற ஜேசீஸ் கிளப் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

இளைப்பாறிய நீதியரசர் திரு. எச். எச்; பஸநாயக்கா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. கட்டுரைப்போட்டியில் பரிசுபெற்றோருக்கு திரு. தோமஸ் அமரசூரியா பரிசில்களை வழங்கினார்.

## மகாவித்தியாலய விளையாட்டுப்போட்டி

குரும்பசிட்டி, வியாழன்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மத்திய மகாவித்தியாலயங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் யாழ். மத்தியகல்லூரி விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 50 பாடசாலைகள் பங்கு பற்றும் இவ்விளையாட்டுப்போட்டிக்கு வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. தனிகாசலம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகியவற்றின் வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் இம்மாதம் 18-ந் திகதி நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

---

## கூ:மொ:வி. ஸ்தாபனம் நடவடிக்கை

கொழும்பு, வியாழன்

கூட்டுறவு மொத்த விற்பனவுஸ்தாபனம், முக்கிய நகரங்களிலுள்ள 55 கடைகளை மட்டுமே ஏற்று நடத்தும். சில்லறைக் கடைகளைத் திரும்பவும் கூட்டுறவுச்சங்கங்களிடம் ஒப்படைக்க ஸ்தாபனம் முடிவு செய்துள்ளது.

சில்லறைக்கடைகளில் அநேகமானவை அரசியல் நோக்கத்திற்காகவே ஆரம்பிக்கப்பட்டவையென கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தை சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். இக்கடைகளை நிர்வகிப்பதில் அதிக செலவுகள் ஏற்படுவதாகவும் அவர்கூறினர்.

---

## 'வேண்டாம் ஓய்வு; வேலைகொடு'

மேற்குப் பேர்லின் (டாட்) ஜூன் 10

முதுமைக்காலத்தில் உதவித்தொகை பெற்றுவாழும் வயோதிகர்களுக்கு அவர்கள் விரும்பினுல் வேலைதேடிக் கொடுப்பதற்கு மேற்கு பேர்லினில் தனி ஸ்தாபனம் ஒன்று தொடங்கப்பட்டிருக்கிறது. முதுமைக் காலத்தில் தனிமையில் வாழ விரும்பாத சிலர் ஏதாவது வேலைபார்க்க விரும்புகிறார்கள். அவர்களுக்கு இந்த ஸ்தாபனம் வேலைதேடிக் கொடுக்கிறது சில நிறுவனங்கள், சிலதுறைகளில் அநுபவம் வாய்ந்தவர்கள் தேவை என இந்த ஸ்தாபனத்திடம் தெரிவிக்கின்றன. உடனே முதியவர்களில் அதற்குத்தகுந்த நபர்களைக் கண்டுபிடித்து அந்த நிறுவனத்திற்கு இந்த ஸ்தாபனம் தெரிவிக்கிறது. ஜேர்மனியில் பெரும்பாலான ஆண்களும், பெண்களும் வயோதிகக் காலத்தில் வாளா இருப்பதைவிட பொறுப்பான ஏதாவது வேலையில் இருப்பதை விரும்புகிறார்கள். மருந்துகளைவிடப் பொறுப்பானவேலை இவர்களுக்கு அதிகத் தெம்பு அளிக்கிறது.

---

## குறைந்த விலையில் காய்கறிகள்

கொழும்பு, வியாழன்

வாடிக்கைக்காரர்களுக்கு மலிவான விலையில் காய்கறிகளைக் கொடுக்கக் கூட்டுறவு இலாகாவும், விற்பனை இலாகாவும் கூட்டாக முயற்சி யெடுத்துள்ளன.

காய்கறிகளின் விலைகள் பற்றி அநேக பாராளுமன்ற அங்கத்தவர்களினுல் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. பொதுமக்களின் வசதிக்காகக் கொழும்பு நகரப்பகுதியில் 20 கூட்டுறவுக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.


விற்பனைக்கு

சுன்னாகம் ஸ்டேசன் றோட்டில் 1 1/2 பரப்புக் காணி, கிணறு வசதியுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: இ. [illegible], ஸ்ரேசன் றோட், சுன்னாகம், 398

WANTED

Wanted a cylinder machine minder with knowledge of composing English and Tamil or Sinhalese to Sri Sanmuganatha Press, Jaffna. 399


## பணிவிடைப்பெண்ணுக்கு கண்கவர் சீருடை!

பிராங்பேர்ட் டாட்
—ஜூன் 10

மேற்குஜெர்மனியிலுள்ள லுப்தான்ஸா" விமானக் கம்பெனியைச் சேர்ந்த விமானப் பணிவிடைப் பெண்களுக்கு (எர் ஹோஸ்டஸ்) இப்பொழுது நவீனபாணியில் கவர்ச்சிகரமான புதுவகை சீருடை தரவழங்கியிருக்கிறார்கள். இந்தச் சீருடை எல்லாப் பெண்களுக்கும் பொருந்தும் வகையிலும் விமானத்தில் பணியாற்றுவதற்கு இடைஞ்சல் இல்லாத வகையிலும் மற்ற விமானக்கம்பெனி பணிவிடைப்பெண்களின் உடையிலிருந்து மாறுபட்டதாகவும் அமைந்திருக்கிறது. விளிம்பு இல்லாததட்டையானதொப்பி. இந்தச் சீருடையின் குறிப்பிடத்தக்க அம்சமாகும் வட்டமும் அல்லது நீண்டமுகம் கொண்ட எந்தப் பெண்ணுக்கும் இத்தொப்பி அழகாகஇருக்கும் அத்துடன் எந்தவகையான நவீன சிகையலங்காரங்களுக்கும் பொருந்தும் வகையில் தொப்பி அமைந்துள்ளது.

---

## சிரமதான மூலம் மீன்பிடித்துறைமுகம்

நெடுந்தீவு, வியாழன்

"உங்களுக்கு மிகவும் தேவையான இத்துறைமுகத்தை அரசாங்க உதவியை எதிர்பாராது நீங்களாகவே செய்து முடிக்க முன்வந்தது மிகவும் மெச்சத்தக்கதாகவும் மற்றவர்களுக்கும் ஒருமுன்மாதிரியாகவும் அமைகிறது. உங்களுக்கு வேண்டிய தேவைகளை நீங்களே முன்னின்று செய்து முடிக்க நீங்கள் காட்டும் ஆர்வம் மிகவும் மெச்சத்தக்கது. உங்கள் பிள்ளைகளுக்கு அரசாங்க உதவி பெறுமல் ஒரு பாடசாலை அமைத்து அங்கு வேதனம் எதுவும் பெறாது ஆசிரியர்கள் கற்பித்து வருவதும் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது" என்று நெடுந்தீவு காரியாதிகாரி திரு. அந்தோனிமுத்து நெடுந்தீவு மத்தியில் உள்ள தாழையம் முனை என்னுமிடத்தில் அமைக்கப்படும் மீன்பிடித் துறைமுகத்தின் ஆரம்பவேலைகளை தொடக்கி வைத்துப் பேசும் போது கூறினர்.

---

## குளமிருந்தும் பயனில்லை

கிளிநொச்சி வியாழன்

கிளிநொச்சிக் குளத்தில் இயந்திரங்கள் கழுவுவதனாலும் சலவைத்தொழிலாளர் சலவை செய்வதனாலும் இவ்வரண்ட நேரத்தில் மக்கள் இந்நீரைக் குடிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டும் குடிக்க முடியாது கஷ்டப்படுகிறார்கள் என்று கிளிநொச்சி நீர்ப்பாசன பொறியியலாளருக்கு எழுதிய கடிதமொன்றில் கரைச்சி கிராமசபை 13-ம் வட்டார உறுப்பினர் குறிப்பிட்டுள்ளாரெனத் தெரியவருகிறது.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# மே.ஜெர்மன் கோஷ்டியிடம் இலங்கை கோஷ்டி (5-1) தோற்றது

## சாதுரியமாக விளையாடுவதில் இலங்கை வீரர் சோபிக்கவில்லை

### கோல்காப்பாளரின் திறமை பாராட்டத்தக்கது

யாழ்ப்பாணம், வியாழன்

நேற்று தேசியமய சேவைகள் மந்திரி திரு வி. ஏ. சுகததாசாவினால் திறந்து வைக்கப்பட்ட யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் ("ஸ்டேடியம்") நடைபெற்ற முதலாவது உதைபந்தாட்டப் போட்டியில் மேற்கு ஜெர்மன் கோஷ்டி இலங்கைக் கோஷ்டியை தோற்கடித்தது. அடுத்தடுத்தாக "கோல்களை" போட்ட மேற்கு ஜெர்மன் கோஷ்டியினர், எதிர்பாராத விதமாக கோல் காப்பாளரின் கவனக் குறைவினால் இலங்கை தனது நிலையைக் காப்பாற்றிக்கொள்ள உதவியளித்துவிட்டது.

இலங்கை தெரிவுக் கோஷ்டிக்கும் மேற்கு ஜெர்மனியிலிருந்து இங்கு வந்த கோஷ்டிக்குமிடையே முதலாவது உதைபந்தாட்டப் போட்டி நேற்றுப்பிற்பகல் அமார் 4-50 க்கு யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் நடைபெற்றது. இப் போட்டியைக் கண்டு களிப்பதற்காக சுமார் ஐயாயிரம் மக்கள் விளையாட்டரங்கின் நாற்புறமும் சூழ்ந்திருந்தனர்.

**சமாதான புறா**

பந்தாட்டப்போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் காதைப் பிளக்கும் வெடிகள் விண்ணை மோதின. விளையாட்டரங்கிலிருந்து விண்ணை நோக்கி அனுப்பப்பட்ட ஒரு பெரிய பந்து, சுமார் 90 அடி உயரத்தில் வெடித்து அதற்குள் இருந்து ஒரு சமாதானப் புறா சுதந்திரமாகப் பறந்து சென்றது. இதனைக் கண்டு ஜேர்மன் கோஷ்டியினர் உட்பட மந்திரி சுகததாசாவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

**போட்டி விபரம்**

விளையாட்டு ஆரம்பித்த 15 நிமிடங்களுக்குப் பின்னர் மேற்கு ஜேர்மன் கோஷ்டி தமது முதலாவது "கோலை" போட்டது. இரண்டாவது கோல் 20 நிமிடங்களில் மூன்றாவது கோல் இடைவேளைக்குப் பின்னர் 5 நிமிடங்களிலும் 15 நிமிடங்களின் பின்னர் நான்காவது கோலும் ஆட்டம் முடிவதற்கு 5 நிமிடங்களுக்கு முன்னர் ஐந்தாவது கோலும் 'தொப்' 'தொப்' என்று விழுந்தன. இலங்கைக் கோஷ்டியின் கோல்காப்பாளரின் திறமையினால் பல "கோல்கள்" காப்பாற்றப் பட்டன.

இல்லாவிடில் நிலைமை மோசமாக இருந்திருக்கும். இலங்கை கோல்காப்பாளர் மிகவும் துரிதமாக பந்தைப் பிடித்து இலங்கையின் 'மானத்தை' ஓரளவு மாதுகாத்துக் கொண்டார்.

**தரம் குறைந்த விளையாட்டு**

நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி பார்வையாளருக்குப் பலவிதத்திலும் ஏமாற்றத்தையே கொடுத்தது. இலங்கை வீரர்களின் விளையாட்டுத் தரம் குறைந்ததாகக் காணப்பட்டது. பந்தைச் சாதுரியமாக கொண்டு செல்வதில் "பாஸிங்" இலங்கை வீரர்கள் பின்னேறுகு வகையே கடைப்பிடித்தனர். பந்தை அடிப்பதிலும் இவர்கள் சோபிக்கவில்லை. மேற்கு ஜெர்மன் கோஷ்டியினரைப் பொறுத்தமட்டில் அவர்களிடம் ஓரளவு திறமையிருந்தது. அதற்கேற்ற மாதிரி ஓட்டத்திலும் சிறந்து விளங்கினர். இலங்கை வீரர்கள் விரைவாகவே களைத்துவிடுகிறார்கள். இதனால் பந்தைக் கொண்டுசெல்வதில் அவர்களுக்குக் கஷ்டமேற்படுகின்றது. குறிப்பாக விளையாட்டு ரசிகர்களுக்கு நேற்றைய போட்டி உற்சாகத்தையளிக்கவில்லை.

மேற்கு ஜேர்மன் கோஷ்டி 5 கோல்களைப் போட்டுக் கொண்ட பின்னர் இலங்கைக் கோஷ்டியினர் அடித்த பந்தைப் பிடித்த மேற்கு ஜெர்மன் கோல்காப்பாளர் பந்தைத் தவறுதலாக வலை எல்லைக்குள் கொண்டுசென்றுவிட்டார். இதனால் இலங்கைக் கோஷ்டி ஒரு கோலைச் சுவீகரித்தது.

# "மகத்தான சாதனை!"

## யாழ்ப்பாணம் விளையாட்டரங்கு திறப்புவிழாவில் மந்திரிபாராட்டு

### "விளையாட்டுத்துறைக்கு புத்துயிர்"

யாழ்ப்பாணம், வியாழன்

**"பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் ஒரு விளையாட்டரங்கை நிறுவி மகத்தான சாதனையை உண்டாக்கிய யாழ்ப்பாண மக்களைப் பாராட்டாமல் இருக்கமுடியவில்லை. அகில இலங்கை வீரர்கள் இத்திறப்புவிழாவில் கலந்துகொள்வதால் இது ஒரு சர்வதேச நிகழ்ச்சியாகவிருக்கிறது. மாகாணங்களைப் பொறுத்தமட்டில் யாழ்ப்பாணத்தின் இச்சாதனை பெரியதாகும்."**

இவ்வாறு நேற்று பிற்பகல் 4-15 மணிக்கு யாழ். விளையாட்டரங்கைத் திறந்துவைத்துப் பேசுகையில் தேசியமய, விளையாட்டுத்துறை மந்திரி வி. ஏ. சுகததாஸா குறிப்பிட்டார்.

மந்திரி மேலும் குறிப்பிட்டதாவது-

மாகாணங்கள் தோறும் விளையாட்டரங்கு நிறுவத் திட்டமொன்றை வகுத்துள்ளேன். நான் விளையாட்டில் அதிக ஆர்வமும் அபிமானமும் உள்ளவனென்பது உங்களுக்குத் தெரியும். அதன் காரணமாகவே கொழும்பில் பல முக்கிய அலுவல்களிலிருந்தும் இத்திறப்புவிழாவில் பங்குபற்றவந்தேன்.

"மாகாணங்கள் தோறும் விளையாட்டரங்குகளை நிறுவுவது அவற்றுக்காகக் காணிகளை வாங்க நிதியொதுக்குவது, விளையாட்டுவீரர்களுக்கு ஊக்கமளிப்பது, பயிற்சியளிப்பது, வெளிநாடுகளிலிருந்து விளையாட்டுக் கோஷ்டிகளை அழைப்பது, இங்கிருந்து விளையாட்டுக் கோஷ்டிகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவது, விளையாட்டுக் கழகங்களுக்கு மானியம் வழங்குவது ஆகிய அம்சங்கள்கொண்ட புதிய திட்டமொன்றை வகுத்துள்ளேன். இதை மந்திரிசபை ஏற்குமென்றே நம்புகிறேன்."

இந்த விளையாட்டரங்கை நிறுவுவதில் முன்னின்று உழைத்த திருவாளர்கள் அல்பிரட் துரையப்பா, ஏ. எஸ். மரியநாயகம், வான்செண்டன் ஆகியோரை மந்திரி பாராட்டினார்.

**விமான நிலையத்தில் வரவேற்பு**

மந்திரி சுகததாசாவை விமான நிலையத்தில் வரவேற்க நேற்றும் பிற்பகல் பலாலி விமான நிலையத்திற்கு முன்னாள் யாழ். எம்.பி. திரு அல்பிரட் துரையப்பா, யாழ்ப்பாணப் பதில் அரசாங்க அதிபர் திரு பெருமைனர், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு எம்.எம். அப்துல்காதர் யாழ் மாநகரசபை முன்னாள் மேயர் திரு ரீ.எஸ். துரைராசா, மாநகரசபை உறுப்பினர் திரு ஏ.ஜி. இராஜசூரியர், பொலிஸ் சுப்ரீண்டன் திரு ஜே.வான்சண்ட், உதவிசுப்ரீண்டன் ஏ. எஸ். மரியநாயகம், யாழ்ப்பாணகாரியாதிகாரி திரு எஸ். சிவஞானம், பத்துப்பேர் வந்திருந்தனர்; விமான நிலையத்திற்கு பெண்களும் வந்திருந்தனர். விமானம் சரியாக 2-30 மணிக்கு விமான நிலையத்தை வந்தடைந்தது.

விமான நிலையத்திலிருந்து காரில் மந்திரி திரு வி. ஏ. சுகததாசா, உதவி மந்திரி எஸ்.ஏ. பீரிஸ் ஆகியோர் திரு அல்பிரட் துரையப்பாவுடன் காரில் யாழ்ப்பாணம் வந்தனர். மேற்குஜெர்மன் உதைபந்தாட்ட வீரர்களும் விமானநிலையத்திலிருந்து வானில் வந்தனர்.

—

**இம்மத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 85-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.**

# டாக்டர் நாகநாதன் குணமடைகிறார்

லண்டன், ஜூன் 9

லண்டனில் தனிப்பட்ட வைத்திய நிலையமொன்றில் சிகிச்சை பெற்றுவரும் நல்லூர் எம்.பி. டாக்டர் ஈ.எம்.வி நாகநாதன் சுகமடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் நாகநாதனுக்கு, பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத்தின் சத்திரசிகிச்சை வைத்தியர்களில் ஒருவரான டெயிலர் பிரபு சிகிச்சை அளித்து வருகிறார்.

டாக்டர் நாகநாதனுக்கு சத்திரசிகிச்சை (ஆபரேஷன்) எதுவும் இதுவரை நடைபெறவில்லை. சத்திரசிகிச்சை அளிக்காமலேயே இதுவரை சுகப்படுத்துவதில் டாக்டர்கள் ஈடுபட்டுள்ளனர். சுவாத்திய வேறுபாடு அவரது உடல்நிலைக்குச் சாதகமாக அமைந்திருக்கிறதாம்.

# தூத்துக்குடி--கொழும்பு கப்பல் சேவை

## இம்மாதம் 20-ந் திகதி ஆரம்பமாகும்

புதுடில்லி, ஜூன் 9

கொழும்பு- தூத்துக்குடி கப்பல்சேவை இம்மாதம் 20-ந்திகதி ஆரம்பமாகவிருக்கிறது. இந்தியாவில் உள்ள பிரபல கப்பல் போக்குவரத்து கம்பெனி ஒன்று இச்சேவையை ஆரம்பிக்கவிருக்கிறது.

கடந்த வருடம் டிசம்பரில் ஏற்பட்ட சூறாவளியால் மன்னார் தனுஷ்கோடி கப்பல் சேவை பாதிக்கப்பட்டு இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் இந்தியா செல்லும் மக்கள் விமான மார்க்கமாகவே பிரயாணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருந்து வருகிறது. இம்மாதம் 20-ந் திகதி ஆரம்பமாகவிருக்கும் தூத்துக்குடி— கொழும்பு கப்பல் சேவையால் இக்கஷ்ட நிலை நீங்குமென நம்பப்படுகிறது. ——

## மக்கள் வங்கியின் புதிய தலைவர்

பம்பலப்பிட்டி, புதன்

திரு. ரி பி. பனல்பொக்கே மக்கள் வங்கியின் புதியதலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புதியதலைவர் 1951-ம் ஆண்டு உதவி நீதிமந்திரியாகவும் பின்னர் உணவு விவசாய உதவி மந்திரியாகவும் கடமையாற்றியுள்ளார். ——

## கரணவாயில் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டிதர் இ. க. முருகேசு, பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், க இராமலிங்கம், சாவேந்தன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியின் வான் நடனமும் பாரதி நாடகமன்றத்தினரின் 'வேங்கைமாறன்' நாடகமும் திரு அருள் எம்பெருமான் கதை வசனமெழுதி டைரக்ட் செய்த 'ஆறடிநிலம்' என்னும் நாடகமும் நடைபெறும். இந்நாடகத்தில் கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரே பாத்திரமேற்றுநடிக்கின்றனர்.

விழாநடைபெறும் இரண்டு நாட்களும் விசேஷ பஸ் போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதென விழாக் கமிட்டிச் செயலாளர் தெரிவிக்கின்றார்.

——

## தனிச்சிங்களத்தில்...

சுழிபுரம், புதன்

தபால்கந்தோர் சேமிப்பு பாஸ் புத்தகங்களுக்கு ஒட்டப்படும் லேபல் ஒரு ரூபா பெறுமதியானது, தனிச்சிங்களத்தில் மட்டுமே அச்சடிக்கப்பட்டுள்ளன. இவை இப்போது வடபகுதியிலுள்ள தபால் கந்தோர்களில் உபயோகிக்கப்பட்டுவருகின்றன. முன்பு ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரண்டு பாஷைகளில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுவந்தன தர்மப்பணம் கொடுப்பதற்கு காற்கந்தோர்களுக்கு சென்ற ஆறும், ஏழாம் திகதிகளில் அனுப்பிவைக்கப்பட்ட பத்திரம் தனிச்சிங்களத்தில்மட்டுமே உள்ளன. இதனால்சிங்களத்தை விளங்கமுடியாமல் உபதபாற்கந்தோர் அதிபர்கள் அவதியுறுவதாக அறியப்படுகிறது. ——

## கட்சிக்கிளை கட்டட கல்நாட்டுவிழா

தொண்டமானாறு, புதன்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தொண்டமானாறு மேற்கு கிளைக் கட்டிடக் கல்நாட்டுவிழாவைக் கடந்த சனிக்கிழமை அவ்வட்டாரக் கிராமசபை அங்கத்தவரும், வாலிபமுன்னணித் தலைவருமான திரு. க. சற்குணநாதன் ஆரம்பித்துவைத்தார். இவ்வைபவத்துக்கு திருவாளர்கள் ஸ்ரீபாஸ்கரன், என். சிவநேசன், முன்னாள் கிராம அதிகாரி திரு. சி. இரத்தினசிங்கம், சி. அருளம்பலம் ஆகியோர் சமூகமளித்தனர்.

தலைவர் நன்றியுரையில் தெழுவிக்கையில் எதிர்காலம் வாலிபர்களில் தான் தங்கியிருக்கிறதென்றும் அதற்கு இராமநாதன் போன்றோர் தேவையென்றும் இன, மத, கட்சி சார்பற்று எல்லோரையும் தம்முடன் ஒத்துழைக்கும்படியும் வேண்டினார்.

## மகாமாரி வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

புளியங்கூடல் மகாமாரி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. வருகிற 5-ந் திகதி சனிக்கிழமை இரதோற்சவம் நடைபெறும்

திருவிழாக்கள் இம்முறையும் சிறப்பாக நடைபெற கோவில் ஆதீனகர்த்தர ஒழுங்கு செய்துள்ளார்

## இடமாற்றம்

குமுழமுனை, புதன்

முல்லைத்தீவு சைவப் பாடசாலைத் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. ச. முத்தையா. முள்ளியவளை சைவப்பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

**காணி விற்பனவு**

நீர்வேலி தெற்கு வெள்ளாளச் சங்கத்திற்குப் பக்கமாகவும், நீர்வேலி தெற்கு வயிரவ கோயிலுக்கு அண்மையில்வடக்குப் பக்கத்திலுள்ள 8 அறைகள்கொண்ட 3 பரப்புக் காணியும் அதன் அருகிலுள்ள 8 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. வீட்டைச் சேர்ந்த இரண்டு பரப்பைத் தனித்தும், 8 பரப்பை இரண்டாகப் பிரித்து தனித்தனியேயும், அல்லது ஒருமித்தும் விலைக்குக் கொடுக்கப்படும். விரும்புவோர் கீழ்க் காணும் விலாசத்துக்கு நேரில் காணவும். விற்பனையாளர்: கெ. கெ. அம்புஜேஸ்மேற் பார்த்து நம். 16 மடம்வீதி, யாழ்ப்பாணம்.